சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# பிரித்தானியர் கால நல்லூர்: ஒரு நோக்கு

— ச. சத்தியசீலன் —

பிரித்தானியர் ஆதிக்கம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 1796 இல் ஆங்கிலக் கடற்படைத் தளபதியான ஜேம்ஸ் ஸ்ருவார்ட் பருத்தித்துறையில் இறங்கி மிக விரைவிலே யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டதிலிருந்து ஆரம்பமாயிற்று. இவ்வகையில் யாழ்ப்பாண மக்களின் பிரதான மைய இடமாகக் காணப்பட்ட நல்லூர்ப் பிரதேசமும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலத்திலே ஐரோப்பிய அரசியல் நிலைமைகளின் விளைவாக அவர்கள் ஆதிக்கம் இப்பிரதேசத்திலும் தளர்வடையலாயிற்று. அதனால் இதுவரை அவர்கள் பின்பற்றிவந்த புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவான கொள்கையிலும் தளர்வு ஏற்படலாயிற்று. இதனால் நல்லூரையும், அதனைச் சுற்றியும் காணப்பட்ட பழைய வழிபாட்டிடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுத் தடை செய்யப்பட்டிருந்த இந்துமத வழிபாட்டு முறைமைகள் வளர்ச்சி அடையாலாயின. இத்தகைய ஒரு பின்னணியிலே பிரித்தானியர் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட போது அவர்கள் பின்பற்றிய மதக் கொள்கை ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதியிலே இடம்பெற்ற இந்துமத வழிபாட்டு முறைமைக்கு மேலும் உத்வேகத்தை அளிப்பதாக அமைந்தது. குடிமக்கள் யாவரும் அவரவர் விரும்பிய மதத்தைப் பின்பற்றலாம் என்ற ஆங்கிலேயரின் கொள்கையினால் மக்களிடையே இந்துமதத்தைப் பின்பற்றுவதிலே தீவிர ஆர்வம் காட்டப்பட்டது, மதச் சுதந்திரம் வழங்கப்பட்டமையினால் முன்பு அரசின் கட்டாயத்தின் பேரிலும், உதவிகளைப் பெறும் வகையிலும் கிறிஸ்தவர்களாய் மதம் மாறியஅனேகர் அம்மார்க்கத்தைக் கைவிட்டு இந்து சமய ஆசாரங்களை வெளிப்படையாக அனுசரிக்கத் தொடங்கினர். முன்னர் இடிக்கப்பட்டிருந்த இந்து ஆலயங்களைத் திரும்பக் கட்டவும், உபயோகிக்கப்படாமற் பாழாய்க் கிடந்த ஆலயங்களைப் புதுபித்து உபயோகிக்கவும், முன்னே பதுங்கி ஒதுங்கி அந்தரங்கத்திற் செய்து வந்த ஆசார, நியம நிட்டைகளைப் பகிரங்கத்திற் செய்யவும் மக்கள் தலைப்பட்டனர்.

இந்திய மகாமேற்றிராணியாராகிய புக்கனன் (Dr. Buchanan) 1806 இல் யாழ்ப்பாணம் வந்து, பார்வையிட்டபின்னர் பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாணத்திலே போத்துக்கேயர் கட்டிய ஆலயங்கள் உபயோகிப்பார் இன்றிப் பாழாய்ப் போகின்றன என்றும், கோவைய்யிலிருந்து வந்த றோமன் கத்தோலிக்க மத குருமார் மாத்திரம் யாழ்ப்பாணத்திலே இருந்து ஊழியம் செய்கின்றார்கள் என்றும், யாழ்ப்பாணத்திலே ஒல்லாந்தர் காலத்திலே புரட்டஸ்தாந்த மதத்தைத் தழுவினோர் அனேகர் கிறிஸ்து மார்க்கத்தை விட்டு மறுபடியும் இந்து மதத்திற்கு மாறுவதாகவும், இது விடயத்தில் ஆங்கில அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பிரித்தானிய அரசுக்கு மனுச் செய்திருந்தார். நாம் முன்னர் பார்த்த நிலைமையை. டாக்டர் புக்கனனின் கருத்து உறுதிப்படுத்துகின்றதனை இங்கு அவதானிக்கலாம். இவ்விடயத்தைக் கவனிக்கும்படி குடியேற்ற நாட்டுக்காரியதரிசி அப்போனதய தேசாதி

பதி சேர்தோமஸ் மெயிற்லண்டிற்குத் தகவல் அனுப்பியிருந்தார்.

பிரித்தானியர் கால நல்லூரைப் பற்றி விளங்கிக் கொள்வதற்கு அதன் இடப்பரப்பினை அறிந்து கொள்வது அவசியமான தாகும். அவ்வகையில் நாம் தற்போது காணும் திருநெல்வேலி, வண்ணார் பண்ணை, நல்லூர், கல்வியங்காடு, நாயன் மார்கட்டுப் பகுதிகளை உள்ளடக்கியதாக இப்பிரதேசம் அமைந்திருந்தது எனலாம். இப்பிரதேசத்தில் இடம்பெற்றுவந்த சம்பவங்களை விளங்கிக்கொள்வதன் மூலம் பிரித்தானியர் காலப்பகுதியில் நல்லூர்ப் பிரதேசம் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது என்பதனை அறிந்து கொள்ளலாம். மேற் குறிப்பிடப்பட்ட ஊர்கள் நெருங்கிய வகையிலே திருமண உறவுகள் மூலமும், தமிழ் அறிஞர்களின் இருப்பிடம், சேவைகள் மூலமும், இந்துமத வளர்ச்சியில் ஆற்றிய பணிகள் மூலமும், இணைக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்து அரசர்களின் தலைநகரமாக நல்லூர் விளங்கியதிலிருந்து சைவத்திற்கும், தமிழுக்கும் ஒரு தலைமையிடமாக அது தொடர்ந்து விளங்கியிருப்பதனைநாம் காண்கின்றோம். தலை நகரமாக விளங்கியதிலிருந்து வளர்ச்சி அடைந்த சைவத் தமிழ்ப் பாரம்பரியம் தொடர்ச்சியாக நல்லூரை மையமாகக் கொண்டு அபிவிருத்தி அடைந்து வந்திருப்பதனைப் பிரித்தானியர் காலப்பகுதியிலும் நாம் காண்கின்றோம். இப்பின்னணியில் தமிழர் மதமாகிய சைவத்திற்கும், அவர்கள் மொழியாகிய தமிழுக்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் நல்லூர் முக்கிய தொண்டினை ஆற்றியுள்ளது. சங்கம் வைத்துத் தமிழ் மொழியும், சைவ சமயமும் தழைக்க உதவிய யாழ்ப்பாணத்து அரசபாரம்பரியம் தொடர்ச்சியாக வேறு வடிவங்களில் இவ்விரண்டின் வளர்ச்சிக்கும் பங்களித்திருப்பதனை நாம் அவதானிக்கலாம்.

நல்லூரின் உள்வட்டத்திலே தற்போது அமைந்திருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலை (1793) மையமாக வைத்து நான்கு திசைகளிலும் நான்கு கோவில்கள் அமைந்திருந்தன. நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கே சட்டநாதர் ஆலயமும், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், தெற்கே கைலாசநாதர் ஆலயமும், மேற்கே வீரமாகாளியம்மன் கோவிலும் அமைந்திருந்தன. இந்நான்கு கோவில்களும் யாழ்ப்பாணத்து மன்னர்களின் காலத்தில அவர்களுடைய ஆதரவைப்பெற்றுச் சிறப்புடன் இயங்கிய கோவில்களாக விளங்கின. இக் கோயில்கள் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்டன. ஒல்லாந்தர் தாம் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டைக்குக் கைலாசநாதர் ஆலயத்தின் கற்களைப் பயன்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அழிக்கப்பட்ட இக் கோவில்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் கடைக் கூற்றிலும், ஆங்கிலேயராட்சியின் ஆரம்பங்களிலும் சைவத் தமிழபிமானிகளால் சிறிது சிறிதாகப் புனரமைக்கப்பட்டன. நல்லூரின் வெளிவட்டத்திலே வண்ணைச்சிவன்கோவில் (1789) பிரதான சிவன்கோவிலாக வளர்ச்சி அடைந்தது. அதற்கு அயலிலே கதிர்வேலாயுதசுவாமி கோவில அமைக்கப்பட்டது. 1920 இல் நல்லூர் கந்தசாமி கோவிலின் பழைய இருப்பிடமாகக் கொள்ளப்படும் இடத்தில் தற்போதைய வடமாகாணக் கல்வி அலுவலகத்திற்கு மேற்கே கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது.

நல்லூர்ப் பிரதேசம் இவ்வாறு காணப்பட அயலிலே பிரித்தானியர் கால யாழ்ப்பாண நகரம் எவ்வாறு காணப்பட்டது என்பதனை அறிதல் பொருத்தமானதாகும். போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டையை மையமாகக் கொண்டு வளர்ந்த யாழ்ப்பாண நகரம் ஒல்லாந்தர் காலத்தில் சில அபிவிருத்திகளுடன் வளர்ச்சியுற்றது. ஆங்கிலேயர் காலத்தில் அது சிறு சதுர அமைப்பினை உடையதாக வலது கோணத்தில் தெருக்களை ஊடறுக்கும், தன்மையினதாகக் காணப்பட்டது. இதன் வடக்கு எல்லையாகத் தேவாலய வீதியும், மேற்கெல்லையாகத் திறந்தவெளி அரங்கும், தெற்கில் கடற்கரை வீதியும், கிழக்கே மூன்றாம் குறுக்குத்தெருவும் அமைந்திருந்தன. இச்சதுரத்தின் வடக்கில் தாராக் குளமும், அதனை அண்டியவயல்களும், வடகிழக்கில் மஞ்சற்கரைச்சான் குளமும்,

தேவரிக்குளமும் அதனை அண்டிய வயல்களும், தெற்கில் வண்ணாங்குளமும், தென்மேற்கில் கரையூர் கிராமமும் அமைந்திருந்தன. இப்பகுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே ஆங்கிலேயர் ஆட்சியின் போது பல புதிய பாடசாலைகள், தேவாலயங்கள், வீதிகள், அரசாங்க நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், வசிப்பிடங்கள் என்பன கட்டப்பட்டுப் பிரதான தலைநகரமாகவும், நிர்வாக மையமாகவும் வளர்ச்சி அடைந்தது. இங்கேதான் பெரும்பாலான ஐரோப்பியக் குடிமக்களதும் அவர் வம்சாவளியினரதும் குடியிருப்புக்கள் காணப்பட்டன. இவ்வகையில் மேலைத்தேயக் கிறிஸ்தவ செல்வாக்குப் பிரதேசமாக யாழ்ப்பாண நகரம் காணப்பட்டது. இதற்கு அயலிலே வடக்கேயும், கிழக்கேயும், வடமேற்கேயும் இந்துச் செல்வாக்குப் பிரதேசமாக நல்லூர் காணப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சி ஆரம்பித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இடம் பெற்ற முக்கிய அபிவிருத்தியாகக் கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களின் நடவடிக்கைகள் அமைந்தன. இம் மிஷனரி இயக்கங்கள் தம் மத மாற்ற, கல்வி நடவடிக்கைகளுக்குப் பிரதானமாகத் தேர்ந்தெடுத்த மையங்களாகச் சைவமும், தமிழும் செழித்தோங்கிய இடங்கள் காணப்பட்டன. அவ்வகையில் தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை நல்லூர் போன்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மிஷனரிப் பிரிவினரும் தத்தம் முயற்சிகளில் ஈடுபட்டனர். அவ்வாறாக 1818 இல் சேர்ச் மிஷன் நல்லூரில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதன் தலைவரான யோசேப் நைற் என்பவர் யாழ்ப்பாண நகரிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்த நல்லூரில் தனது இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டார். நீண்ட காலமாகவே இந்து, தமிழ்ப் பாரம்பரியத்தைக் கொண்ட நல்லூரிலே இவரது நடவடிக்கைகளுக்குக் கடுமையான எதிர்ப்புக் காட்டப்பட்டது. இக்கால மக்கள் மிஷனரிமாரினைச் ''சாதி குறைந்தவர்கள்'' (Outcasts) என்றும், தங்கள் இருப்பிடங்களுக்கு அவர்களது வருகை தூய்மைக் கோட்டினை ஏற்படுத்துவதாகவும் கருதினர். இத்தகைய ஒரு எதிர்ப்பின் மத்தியிலேதான் வண:.யோசேப் நைற் அவர்கள் தம் மிஷனரி நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

மிக விரைவிலேயே நல்லூரில் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும், அதனை ஒட்டிய சில வாழ்விடங்களும் மிஷனரிமார்களுக்காக அமைக்கப்பட்டன. (1820) இன்று நாம் நல்லூரில் யமுனாரிக்கு அருகாமையில் காணப்படும் தேவாலயம் இப்பின்னணியில் அமைக்கப்பட்டதாகும். அத்துடன் 1822 யூலையில் இவரால் நல்லூர் ஆங்கில பாடசாலை என்ற பெயரில் ஆங்கில மொழி மூலம் போதனையை வழங்கும் பாடசாலை ஒன்று தாபிக்கப்பட்டது. தொடர்ந்து 1841 இல் பெண் கல்வியை முன்னேற்றும் வகையில் நல்லூர் பெண்கள் விடுதிப் பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதே வடரும் நல்லூர் ஆங்கில பாடசாலை சுண்டிக்குளிக்கு மாற்றப்பட்டது. 1826 இல் முதன்முதலாக இலங்கையில் அதுவும் நல்லூரிலே ஒரு அச்சியந்திரசாலை ஒன்று அமைக்கப்பட்டது. உண்மையிலே அமெரிக்கன் மிஷனரிச் சங்கத்தினால் கொண்டு வரப்பட்ட இவ்வச்சுயந்திரம் இயங்குவதற்கு அரசினால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் வண. யோசேப் நைற் அவர்கள் அதனை விலைக்கு வாங்கி நல்லூரிலே நிறுவிக் கொண்டார். இவ்வச்சகத்திலிருந்து முதன்முதலில் 'முத்திவழி' எனும் தமிழ் நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. கிறிஸ்தவ மதம் பரப்பலுக்கும், கல்வித் தேவைக்குமான பெருமளவு பிரசுரங்கள் இவ்வச்சகம் மூலம் பிரசுரிக்கப்பட்டன. இவ்வாறு பலவகையிலும் சேர்ச்மிஷனரிமார் ம் மத, கல்வித் தொண்டினை நல்லூரை மையமாக வைத்து ஆற்றி வந்தமை அங்கு வாழ்ந்த தமிழிந்து மக்களிடையே பெரும் அதிருப்தியினை ஏற்படுத்தலாயிற்று. நல்லூரில் மட்டுமல்ல யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் பல பாகங்களிலும் மிஷனரிமார்களின் மதம் பரப்பும் வேலையும், அதற்கு ஒரு வழியான கல்வித் தொண்டும் இந்துமக்களிடையே அதிருப்தியைப் பெற்று வந்தது.

மிஷனரிமார்களின் இத்தகைய நடவடிக்கைகள் அங்கு வாழ்ந்த தமிழிந்து மக்களிடையே எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தலாயிற்று. இந்த எதிர் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவத்தைக் கொடுக்கும் வகையில் நல்லூரும், அதனது வரலாற்றுப் பாரம் பரியமும், அங்கு வாழ்ந்த கற்றோர் உயர்குழாமும் இயங்குவதனை அவதானிக்கலாம். இவர்களது எதிர் நடவடிக்கைகளின் ஆரம்பமாக நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பிரதமகுருவாக இருந்த சுப்பையர் என்பவரால் அரசாங்க உதவியுடன் யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத-தமிழ்ப்பாடசாலை அமைப்பதற்குரிய முயற்சிகள் 1816-18 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை எடுத்துக் காட்டலாம். இலங்கையில் நீதிபதியாகவும் பின்னர் பிரதம நீதியரசராகவும் விளங்கிய அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் மூலம் இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்தைப் பிரதமகுருக்கள் அணுகியிருந்தார். ஆனால் அரசிடமிருந்து சாதகமாக எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை. 1834 அளவில் யாழ்ப்பாணத்தில் 239 இந்து சமயப் பாடசாலைகள் இருந்தன என்றும் அவை கிறிஸ்தவ மிஷனரிமாரின் நடவடிக்கைகளின் முன் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் அவர்கள் கைகளுக்கே மாறியதாகவும் அறிகின்றோம்.

கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களின் மதப்பிரசார, கல்வி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் 1840 களின் ஆரம்பத்தில் நல்லூரை மையமாக வைத்து இந்துமத இயக்கம் ஒன்று உருவாகியது. மதத்தையும், மொழியையும் ஒன்றிணைத்துச் செல்லும் தேசியப் பண்பு கொண்ட அதே சமயம் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஓர் இயக்கமாகவும் காணப்பட்டது. இது நல்லூரை இந்து சமய விழிப்புணர்ச்சியின் கேந்திர ஸ்தானமாகவும் நாவலரை இவ்வியக்கத்தின் நாயகனாகவும் விளங்க வழிவகுத்தது. திண்ணைப் பாடசாலையில் இந்து மரபிலும், மெதடிஸ்ற் மத்திய கல்லூரியில் நவீன ஆங்கில மரபிலும் கல்வி பெற்ற நாவலர் பின்னதிலே ஆசிரியராகக் கடமையாற்றினார். பத்து வருடங்களுக்கு மேலாகக் கிறிஸ்தவ மிஷனரிமாருடன் பழகிக் கிறித்தவ மதம், நிறுவன அமைப்பு முறை, இயங்கு முறை, பிரசார நடவடிக்கைகள் பற்றி நன்கறிந்த நாவலர் அதே உத்திகளைக் கொண்டு இந்துமத வளர்ச்சிக்கும், கிறிஸ்தவமத எதிர்ப்புக்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இந்துசமயச் சூழலில் கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற இயக்கம் 1842 இல் ஆரம்பமானதெனலாம். இந்த ஆண்டிலே வைத்திலிங்கச் செட்டியார் முத்துவேலுச் செட்டியார், சிறாப்பர் குருநாதமுதலியார், இரகுநாத முதலியார் போன்ற உயர் குழாத்தினர் ஒன்றுகூடிக் கிறிஸ்தவ சமயப்பிரசாரத்தைத் தடுக்கவும், இந்து சமயப் பிரசாரம் செய்யவும் பாடசாலை ஒன்றினை நிறுவினர். 1848 இல் ஆறுமுக நாவலர் அவர்களால் நல்லூரின் ஒரு பகுதியாக விளங்கிய வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற கல்விச்சாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்துமத வளர்ச்சிக்கு அடிப்படையானது அவர்களிடையே கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவதே என்பதனை மிஷனரிமாருடன் கொண்ட தொடர்பினால் நன்குணர்ந்துகொண்ட நாவலர், இம் முயற்சியில் தீவிரமாக ஈடுபடலானர். அதனைத் தொடர்ந்து வடபகுதியில் பெரும்பாலான கிராமங்களில் இத்தகைய பாடசாலைகள் நிறுவப்பட்டன. சுதேச மொழிக் கல்வியில் மட்டுமல்ல ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்தவராகவும் நாவலர் விளங்கியமையால் 1872 இல் வண்ணார் பண்ணையிலே இந்துச் சூழலில் ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்காகச் சைவாங்கில வித்தியாசாலை அவரால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பணமுடையாலும், அரச அங்கீகாரம் கிடைக்காமையினாலும் 1876 இல் இப் பாடசாலை மூடப்பட்டது. என்றாலும் அவரது கனவு பின்னர் ( 1890 ) தோன்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்மூலம் நிறைவெய்தலாயிற்று.

நாவலர் தமிழ் மாணவர்கள் இந்து மதத்தின் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் இலகுவான முறையிலே விளங்கிக் கொள்ளும் வகையிலும் அம்மதத்தில் வழக்கில் காணப்படும் மூடநம்பிக்கைகள், நடைமுறைகள் என்பனவற்றை நீக்கிச் சீர்திருத்தம் செய்யும் வகையிலும் கிறிஸ்தவப் போதகர்கள் பின்பற்றிய யுக்திகளைப் பயன்படுத்தலானார். இத்தன்மை கொண்டனவாக அவரது சமயப் பிரசங்கங்கள் அமைந்தன. 1847 ஆண்டு நாவலரால் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் ஆரம்பமாகிப் பின்னர் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்ற சமயப் பிரசங்கங்கள், புராண படலங்கள் இந்து சமய தத்துவத்தை இலகுவான முறையிலே தமிழ் மக்களிடையே விளக்கின. அவரால் வண்ணார்பண்ணையிலும், சிதம்பரத்திலும் அமைக்கப்பட்ட இரண்டு அச்சியந்திரசாலைகள் இந்துமதத்திற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பல பிரசுரங்களை வெளியிட்டுப் பெருந்தொண்டாற்றின. வண்ணார்பண்ணையில் 1848இல் அமைக்கப்பட்ட அச்சியந்திரசாலை கிறிஸ்தவ மதப்பிரசாரத்திற்கு எதிராகப் பல பிரசுரங்களை வெளியிட்டு இந்துக்களின் சமய உணர்வை வளர்ச்சிப் படுத்தியது. நல்லூரில் பிறந்து வளர்ந்த நாவலர் தன் சமயப் பிரசங்கங்களை பழமை மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பிக்காது வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலே ஆரம்பித்திருந்தார். நல்லூர்க்கந்தசுவாமி கோவில் ஆகமமுறையில் அமைக்கப் படவில்லை என்ற அவரது குற்றச் சாட்டும், கோவில் நிர்வாகத்துடன் அவர் கொண்ட முரண்பாடுகளும் வண்ணார்பண்ணைக்கு அவரது நடவடிக்கைகள் மாற உதவியிருந்தன. அதேமயம் இப்பிரதேசம் வெஸ்லியன் மிஷனரிமாரால் ஒரு கிறிஸ்தவ மதம் பரப்பும் பகுதியாக தெரியப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும் இன்னொரு காரணமாக அமைந்தது. இவ்வகையில் வெஸ்லியன் மிஷனரியால் இங்கு கில்னர்பாடசாலையும், பெண்களுக்கான இன்னோர் பாடசாலையும் அமைக்கப்பட்டிருந்தன. பேர்சிவெல் பாதிரியாருடன் நெருங்கிய வகையிலே பழகிய நாவலர் கிறிஸ்தவ மிஷனரிமாரின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்தவராக, அதற்கேற்ற வகையில் தன் பிரசார யுக்திகளையும், களத்தையும் அமைத்துக் கொண்டார். நல்லூரை மையமாக வைத்து வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவ மத எதிர்ப்பியக்கத்தினால் தான் நல்லூர், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, கல்வியங்காடு, நாயன்மார்கட்டு ஆகிய ஊர்கள் தம்பழைய மத அடையாளத்தை இழக்காது விளங்குகின்றன. கிறிஸ்தவ மத எதிர்ப்பிரசாரங்களை முன்னின்று நடத்திய பிரதேசங்களாக நல்லூர், வண்ணார்பண்ணை என்பவற்றுடன் சுன்னாகம், மாதகல் என்பனவும் விளங்கின. இவ்விடங்களிலிருந்து சிலரைத் தெரிவு செய்து இவ்வெதிர்ப்பிரசாரத்தை நடத்தியதாகவும், கிறிஸ்தவ மதகண்டனம், கும்மி மூலமாகக் கிறிஸ்துமார்க்க தூஷணை பாஷணங்களை இந்துக்கள் வெளியிட்டதாகவும் அறிகின்றோம். இவ்வகையில் நல்லூர் கிறிஸ்தவ மதப்பரப்பலுக்கு எதிராகவும், அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு ஒரு பதிலீடாகவும் தலைமைத்துவம் கொடுக்க முற்பட்டிருந்தது.

நாவலர் தலைமைத்துவம் கொடுத்த இந்து மறுமலர்ச்சி இயக்கம் அடிப்படையிலே சில குறைபாடுகளைக் கொண்டிருந்தது. முக்கியமாக அது உயர் சாதியினரது இயக்கமாகவே செயற்பட்டது. கிறிஸ்தவ மிஷனரி மார்களிடம் காணப்பட்ட தாராள சிந்தை, சாதிவேறுபாடற்ற நோக்கு, தமிழர் அனைவரையும் சமமாக மதித்தல் போன்ற பண்புகள் பெருமளவு அற்ற ஓர் இயக்கமாகவே இது காணப்பட்டது. அத்துடன் தாபன அமைப்பு எதனையும் இவ்வியக்கம் பெற்றிருக்கவில்லை. சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பின்னால் இருந்ததைப் போன்ற வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்பொன்று தமிழர்களிடையே காணப்படவில்லை. இக்காரணங்களினால் சிங்கள, பௌத்த, மறுமலர்ச்சி இயக்கம் வகித்ததைப் போன்ற ஒரு பங்கினை இவ்வியக்கம் இலங்கைத் தமிழர் சமுதாயம் பொறுத்து வகிக்க முடியாது போயிற்று. பெருமளவிற்கு இது ஒரு தனி மனித இயக்கமாகவே செயற்பட்டதெனலாம். இப்பின்னணியில்தான் தமிழ்தந்த

சி.வை. தாமோதரம்பிள்ளை பின்வருமாறு பாடியிருத்தல் வேண்டும்.

‘ நல்லைநகராறு முக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே – எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே ப்ரசங்கமெங்கே
ஆத்தனறிவெங்கே அறை !

நாவலர் 1879 இல் மறைந்த பின்னர் இவ்வியக்கம் தளர்வடையலாயிற்று. கிறிஸ்தவ மதப் பிரசாரம் வலுப்பெறலாயிற்று. ஆனால் இக்காலப் பகுதியில் இந்துசமய வளர்ச்சிக்கான திட்டங்கள் நவீன மயப்படுத்தப்பட்டன. முன்னைய காலப்பகுதியைப் போலன்றி இக்கால இயக்கத்தை வழிநடத்தியோர் ஆங்கிலக் கல்வியின் முழுப்பயனையும் பெற்ற, உயர்பதவிகளில் அமர்ந்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டம் பிரம்மசமாஷம், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோரது நடவடிக்கைகள், இந்திய தேசிய காங்கிரசின் செயற்பாடுகள் பற்றி நன்கு அறிந்தவர்களாகவும், சிலவற்றுடன் தொடர்பு கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். நாவலர் மறைவின் பின் கிறிஸ்தவமதப்பிரசாரம்பலம்பெறுவதனைத் தடுக்கும் நோக்குடன் நாவலரது உறவினரும், மாணவர்களும் ஒன்றுகூடிச் சைவப் பிரகாச சமாலம் தாபித்து ‘உதயபானு’ எனும் இந்துப் பத்திரிகையை வெளியிட்டனர். மீண்டும் நல்லூர் பிரதேசமே இந் நடவடிக்கைகளுக்குக் களமாக இருப்பதனை அவதானிக்கலாம். இதே காலத்தில் பௌத்தர்களிடையே செல்வாக்கு பெற்று வந்த பௌத்த பிரம்மஞான சங்கம் போன்ற ஒன்றின் அவசியம் இந்துக்களினாலே உணரப்பட்டது. இப்பின்னணியில் 1888 இல் சைவ பரிபாலன சபை தாபிக்கப்பட்டு நாவலர் விட்டுச்சென்ற பணிகளை மீள எடுத்துச் செல்லலாயிற்று. ஈழத்து இந்துமத வரலாற்றில் இச்சபையின் தோற்றம் முக்கியத்துவம் வாய்ந்தது. அது இந்துசாதனம் என்ற பத்திரிகையை வெளியிட்டு இந்துமத வளர்ச்சிக்கும், சீர்திருத்தத்திற்கும் பாடுபட்டது.

நல்லூர் பிரதேசம் தமிழகத்துடனான உறவுகள் பொறுத்து இக் காலப்பகுதியிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இத்தொடர்பு இந்து மதம், தமிழ் மொழி என்பவற்றுடன் நெருங்கிய வகையிலே இணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்து அரசர் காலத்திலிருந்தே இவ்வகைத் தொடர்புகள் இப் பிரதேசங்களுக்கிடையில் வலுப்பெற்று வந்திருப்பதனைக் காணமுடிகின்றது. அத்தகைய தொடர்பின் விளைவாக நல்லூரில் தமிழ் அறிஞர் பலர் தோற்றம் பெற்றும், தமிழகத்திலிருந்து வந்து தங்கியும், தமிழுக்கும், இந்து மதத்திற்கும் தொண்டாற்றி இருப்பதனை அறியலாம். திருவண்ணாமலையாதீன கூழங்கைத் தம்பிரான், கொச்சிக் கணேசையர், செந்தில்நாதையர், ஞானப்பிரகாச தேசிகர், நெல்லைநாத முதலியார், சேனாதிராய முதலியார், வில்லவராயர். ஆராய்ச்சிக் கந்தர், ஆறுமுகநாவலர் என்போர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கோர் ஆவர். கூழங்கைத் தம்பிரான் பறங்கிக்காரரால் அழித்தொழிக்கப்பட்ட சைவப் பரம்பரையை மீண்டும் யாழ்ப்பாணத்திலே தழைக்க வைத்தவராகக் குறிப்பிடப்படுகின்றார். இவர் நல்லைக் கந்தன்மேல், ‘ நல்லைக்கலி வெண்பா ’ என்ற பிரபந்தத்தைப் பாடியுள்ளார். செந்தமிழறிவு குன்றிய காலத்தில் சேனாதிராய முதலியார் நல்லூரில் அலுவலகம் அமைத்துத் தமிழ் மொழியை வளம்படுத்தியவராகக் கொள்ளப்படுகின்றார். இவர் நல்லை முருகன் மீது நல்லைக் குறிஞ்சி, ஊஞ்சல் முதலிய பிரபந்தங்களைப் பாடியதாக அறிகின்றோம். இவர் பன்மொழிப் புலவராக விளங்கியதுடன் அரசாங்கத்தில் உயர்பதவி வகித்தவராகவும் விளங்கினார்.

நல்லூர் பிரதேசம் பழமைமிக்க பல இந்துக் கோவில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கோவில்களில் பூஜை போன்ற நித்திய கருமங்களை நிறைவேற்றத் தமிழகத்திலிருந்து பிராமணர்கள் வந்து தங்கியுள்ளனர். அத்துடன் கோவில் கட்டிடம், சிற்பம் மற்றும் பிறவேலைகள் தொடர்பாகவும் தமிழகத்துக் கலைஞர்கள்

வந்து அவர்கள் மூலமான தொடர்பும் ஏற்பட்டுள்ளது. அத்தகைய கோவில்களாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில், வீரமாகாளியம்மன் கோவில், சட்டநாதர் கோவில், கைலாய நாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில், நல்லூர் சிவன் கோவில், திருநெல்வேலிச் சிவன்கோவில் காளி கோவில்கள், வண்ணைச்சிவன்கோவில், கதிர்வேலாயுதசுவாமி கோவில், கன்னாநிட்டி காளி கோவில் என்பவனவற்றைக் குறிப்பிடலாம், இங்கு இறுதியாகக் குறிப்பிட்ட கோயில் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலைக் கட்டத் தமிழகத்திலிருந்து வந்த சிற்பிகளின் வழிபாட்டிற்காக அவர்களால் அமைக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. இக்கோவில்களின் மூலவிக்கிரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பெயர்களுக்கும், தமிழகத்திலுள்ள கோயில்களின் மூலவிக்கிரகங்களுக்கும் இடையில் பெயர் ஒற்மைகள் காணப்படுகின்றன. இப்பெயர் ஒற்றுமை தமிழகக் கோவில்களுக்கும், அப்பிரதேசங்களுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் முன்னர் காணப்பட்ட நெருங்கிய தொடர்பினை எடுத்துக் காட்டுகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலாகும். அவ்வாறே தமிழகத்திலிருந்து பிராமணர்வந்து பூஜை செய்ததன் விளைவாக வெயிலுகந்த பிள்ளையார் கோவில் அர்ச்சகரை 'திருவாடானையர்' என்று அரவது சொந்த ஊர்ப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டிருத்தலை உதாரணத்திற்கு காட்டலாம்.

யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமிடையில் ஏற்பட்ட இக் கலாசாரத் தொடர்பை விட வர்த்தக நடவடிக்கைகள் பொறுத்தும் உறவுகள் ஏற்பட்டிருந்தன. ஒல்லாந்தர் காலந்தில் அவர்கள் மேற் கொண்ட கடல்கடந்த வர்த்தக நடவடிக்கைகளின் ஒரு தொடர்ச்சியாகவே இவ்வுறவு அமைந்ததெனலாம். யாழ்ப்பாணப் பிரதேசம் தமிழகத்திலிருந்து மிகக் குறுகிய கடற்பரப்பினால் பிரிக்கப்பட்டிருந்தமை நீண்ட காலமாகவே இத்தகைய உறவுகள் ஏற்ற, இறக்கங்களுடன் இடம் பெற்று வந்திருப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. இப்பின்னணியில் தான் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதியில் சிறியளவில் ஆரம்பமாகிய நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களின் வர்த்தக நடவடிக்கைகள் பிரித்தானியர் காலத்தில் பெருமளவில் இடம் பெறுகின்றன. தமிழகத்தில் மட்டுமல்ல மலாயா சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் தம் வர்த்தக நடவடிக்கைகளே மேற் கொண்டிருந்ததுடன், அந்நாடுகளில் சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்களாகவும் இச் செட்டியார் சமூகம் விளங்குகின்றது. 1800 இலிருந்து யாழ்ப்பாணத்திலே பெருமளவிலான வர்த்தகம் நாட்டுக் கோட்டைச் செட்டிமாரால் நடத்தப்பட்டதாக அறிகின்றோம். முக்கியமாக இவர்கள் நெல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். நல்லூரிலே தற்போது காணப்படும் செட்டித் தெருவிலே இவர்களது கிட்டங்கிகளும், இருப்பிடங்களும் பெருமளவு இருந்ததாகத் தகவல் பெறுகிறோம். கொழும்புத்துறையில் கப்பல்களிலிருந்து இறக்கப்பட்ட பொருட்கள் இங்கே இருப்பில் வைக்கப்பட்டன. வைத்திலிங்கச் செட்டியார், முத்துவேலுச் செட்டியார் போன்றோரின் பெருமளவு நிதியுதவியுடன் வண்ணைச் சிவன் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் திருவிழா உபயகாரர்களாக இவர்கள் விளங்கினர். முருக பக்தர்களான இச்செட்டியார் வண்ணார்பண்ணையிலே தம் வழிபாட்டிற்காகக் கதிர் வேலாயுத சுவாமி கோயிலையும் கட்டுவித்துப் பராமரித்து வந்தனர்.

நாவலரது இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கும், கிறிஸ்தவ மத எதிர்ப்பிரசாரத்திற்கும் பெரிதும் பொருளுதவி செய்தவர்களாகச் செட்டியார் சமூகம் காணப்பட்டது. நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அமைப்பதற்கு வேண்டிய நிலம் வழங்கியவர் இச் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகச் செட்டியார் அவர்களே. நாவலரின் சமயப் பிரசங்கங்களையும், புராணப்படலங்களையும் ஊக்குவித்துப் பொருளுதவி செய்தமை மட்டுமல்ல தமிழகத்தில் அவரது நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தவர்களாகவும் இவர்களே காணப்பட்டனர். ஈழத்தில் அப்போதிருந்த இந்து சமூகத்தவ

ரிடையே பொருளாதார வசதி படைத்தவர்களாக விளங்கியவர்களும் இவர்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், ஏனைய இந்துக்களுடைய பொருளாதார நிலை விருத்தியடையும் வரை இந்துக் கைங்கரியங்களுக்குச் செட்டி நகரத்தார் பெரும் பணவுதவி செய்திருந்தமை மறக்கப்பட முடியாததாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் பின்பாக மலாயப் பணம் இந்தக் கைங்கரியங்களுக்குப் பயன்படுத்தப்படுவதனை நாம் காணலாம். இவ்வகையில் நல்லூர் களம் அமைத்துக் கொடுத்த நாவலரின் சமய, சமூகப் பணிகளுக்குச் செட்டிநாட்டவரின் பங்களிப்புப் பாராட்டற்குரியதாகும்.

யாழ்ப்பாண நகரிலும், நல்லூரிலும் கிறிஸ்தவ மிஷனரிமார் மேற்கொண்ட மத, கல்வி நடவடிக்கைகள் இந்துக்களில் உயர் குழாத்தினரை மிஷனரிமார் கைக்கொண்ட அதே வழிமுறைகளைப் பின்பற்றித் தம் மத, கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுத்தது. யாழ்ப்பாண நகரம் கிறிஸ்தவ மதத்தினையும், மேலைத்தேயப் பண்பாட்டம்சங்களையும் பெருமளவுபேணி நிற்க, நல்லூர்ப் பிரதேசம் பெருமளவுக்கு இந்து, தமிழ்ப் பண்பாட்டம்சங்களைப் பேணிநின்றதெனலாம். இவ்வகையில் அயலிலே இருந்த இரு பகுதிகளும் தத்தம் அடையாளத்தைப் பேணும் தன்மைகொண்டனவாக இப்பிரதேசத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் அமைந்திருந்தன. நல்லூரிலே முதன்முதலாக 1826 இல் அச்சியந்திரசாலை ஒன்று தாபிக்கப்பட்டதையும், அது அவர்களது மதப் பிரசாரம், கல்வி நடவடிக்கைகளுக்குப் பெருமளவு உதவியிருந்ததையும் கண்ட நாவலர் தாமும் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச அச்சியந்திர சாலையை அமைத்துக்கொண்டார். 1822 இல் நல்லூர் ஆங்கிலப்பாடசாலை மிஷனரிமாரினால் தாபிக்கப்பட்டமை வண்ணார் பண்ணையில் அத்தகைய ஒரு பாடசாலை தாபிக்கப்படுவதற்கு நாவலருக்கும் இந்துக்களுக்கும் சிந்தனையையும், உத்வேகத்தையும் கொடுத்திருத்தல் வேண்டும். தமிழிந்து மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடசாலைகள் நிறுவியதனையும், பின்னாளில் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவமளித்துப் பாடசாலைகள் நிறுவப்பட்டமையும் மிஷனரிமாரின் நடவடிக்கைகளின் எதிர்விளைவாக ஏற்பட்ட அபிவிருத்திகளாகும். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மிஷனரிமாரின் நடவடிக்கைகள் தமிழிந்து மக்களைப் பொறுத்துத் தங்கள் அடையாளங்களைப் பேணும்வகையில் ஒருவித பொறுப்புணர்வை (Response) உருவாக்கி வளர்த்துவிட்டதெனக் கூறலாம். இப் பொறுப்புணர்வின் மையமாக நல்லூர் விளங்கியதெனலாம். இப் பின்னணியில் தான் இந்துக்கள் தங்களால் இயன்றவகையில் கல்வி, மத நிறுவனங்களைப் போட்டி மனப்பான்மை அடிப்படையில் உருவாக்கி வளர்த்துக்கொண்டனர், இப் போட்டி நிலை கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதல்மூலம் பொருளாதார, சமூக ஆதாயங்களைப் பெறும் நிலைமை தளர்வடைய வலுவிழக்கலாயிற்று.

பிரித்தானியர் கால நல்லூர் பாரம்பரியக் கைவினைப் பொருட்களின் உற்பத்தி பொறுத்து நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்தது. அத்தகைய ஒரு தொழிலாக நெசவுத் தொழில் விளங்கியிருந்தது. வண்ணார்பண்ணையில் சினியர் வீதியில் வசித்துவந்த சினியர் சமூகத்தவர் மிகத்தரமான துணிகளை உற்பத்தி செய்தவர்களாகவும், அழகான கோலங்களை அவற்றில் இடுபவர்களாகவும், சிங்களப் பெண்களால் அவை மிகவும் விரும்பி அணியப்பட்டன என்றும் அறிகிறோம். தமிழ்ப் பெண்கள் விரும்பியணியும் நேர்த்தியான சேலைகளை நெய்தவர்களாகவும் இவர்கள் விளங்கினர். இவர்களது உற்பத்திப் பொருட்கள் அகில இலங்கைக் கண்காட்சியில் முதற் பரிசினைக் கூடப் பெற்றிருந்தன. இதனை விடச் சாயமிடுதல், பித்தளையிலான வேலைகள், பொற் தொழில், வண்டிகட்டுதல், கூடை நெசவு போன்ற கைவினைத் தொழில்களும் நல்லூரிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. இங்கு நெய்யப்பட்ட கோவில் தேவைகளுக்கான பித்தளையிலான பாத்திரங்கள் தென்னிந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டதிலிருந்து அவற்றின் தரத்தைக் கணிப்

பிடலாம். நேர்த்தியான பொன்னாலான ஆபரணங்களைச் செய்தமைக்காகவும், சிறந்த சவாரி வண்டிகளைச் செய்தமைக்காகவும் அகில இலங்கை ரீதியான பொருட்காட்சியில் பரிசுகளை இப்பிரதேசம் பெற்றுள்ளது. இலங்கையில் கூடைபின்னலில் தலைசிறந்த களுத்துறைக் கூடைகளிலும் பார்க்க உயர்ந்த தரத்திலான கூடைகளாக வண்ணார்பண்ணையில் பின்னப்பட்ட கூடைகள் கருதப்பட்டன. இவ்வாறு பாரம்பரியக் கைவினைப் பொருட்கள் உற்பத்தி பொறுத்து இப்பிரதேசம் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தது.

வட இலங்கையில் தோன்றி வளர்ச்சி பெற்ற தனித்தமிழ் இராச்சியத்தின் தலைநகர் என்ற வரலாற்று உண்மையை நினைவு கூறும் வகையில் நல்லூர் விளங்கியது. பிரித்தானியர் காலத்தில் கிறிஸ்தவ மதப் பரம்பலை எதிர்த்துச் செயற்பட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமைத் தானமாகவும் இப்பிரதேசம் அமைந்திருந்தது. அத்துடன் தமிழ்மொழியும், இந்து மதமும் தழைத்தோங்கப் பாடுபட்ட பல தமிழறிஞர்களைக் கொண்டிலங்கிய இடமாகவும், கோவில்கள் பலவற்றின் மூலம் இந்துப் பண்பாட்டையும், தமிழர் நாகரிகத்தையும் எடுத்துக் காட்டும் கலாசாரக் கேந்திரமாகவும் நல்லூர் விளங்கியுள்ளது. இப்பிரதேசம் தமிழிந்து மாணவர்களின் கல்விவளர்ச்சிக்குத் தொண்டாற்றிய தன்மையினாலும், சிறந்த கைப்பணி வேலைகளின் மையமாகவும், குறிப்பிடத்தக்க அளவிலான வர்த்தக நடவடிக்கைகளின் நிலையமாகவும் சிறப்பினைப் பெற்றுள்ளது. இப்பின்னணியில் இலங்கைவாழ் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார வாழ்வின் தலைமைத் தானமாக நல்லூர் பிரதேசம் இயங்கி வந்துள்ளமையை இக்குறிப்பிட்ட காலப் பகுதியில் கண்டுகொள்ளலாம். □

---

### உசாத்துணை நூல்கள்


1. அருமைநாயகம், க., "பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி", *திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர்*, கொழும்பு. 1976.
2. Chelliah, J. V., *A Century of English Education*, American Ceylon Mission Press, Tellipalai, 1922.
3. Indrapala, K., 'The City of Jaffna - A brief History' in *The Jaffna Municipal - Council Silver Jubilee Souvenir. 1949-1974*, Jaffna, 1974.
4. ஜெபநேசன், எஸ்., *அமெரிக்கன் மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்*, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, 1983.
5. Jayasuriya, J. E., *Education in Ceylon Before and After Independence*, Colombo, 1969.
6. கைலாசபதி, க., (பதிப்பாசிரியர்) *நாவலர் நூற்றாண்டு விழா மலர், 1979*, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, கொழும்பு 1979.
7. குலரத்தினம், க. சி., *நல்லூரும் நாற்றிசைக் கோவில்களும்*, கட்டுரைத் தொகுப்புக்கள், (விரைவில் அச்சில்)

8. மாணிக்கவாசகர், கா., 'யாழ். நகரின் கல்விக் கருவூலம் — வேம்படி ஒரு நூற்றாண்டு வரலாறு *The Torch Bearer 1988, 150th Anniversary*, Vembadi Girls High School Jaffna. 1989

9. Martyn, John, H.. *Notes on Jaffna*, American Ceylon Mission Press, Tellipalai, 1923.

10. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம், 1963.

11. சத்தியசீலன், ச., யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மலேஷியாவுக்கு 1940 வரை நடைபெற்ற குடிபெயர்வு – சில அம்சங்கள். வரலாற்று முதுகலை மாணிப் பட்டத்திற்கான தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1980. (பதிப்பிக்கப்படாதது).

12. திருவருள், இந்துசமயச் சஞ்சிகை மலர் 1, இதழ் 4; மலர் 2, இதழ் 7, 8, 9, யாழ்ப்பாணம், 1981, 1982.

13. வேலுப்பிள்ளை, சி. டி., அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம், தெல்லிப்பழை, 1922.

14. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி, சென்னை? 1918.

15. ஆறுமுகம், வ., 'இலங்கையிற் சைவக் கல்வியின் எழுச்சி', திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், கொழும்பு, 1976.

16. திரு. க. சி. குலரத்தினம் அவர்களுக்கு கட்டுரை ஆசிரியர் கட்டுரைக்கு வேண்டிய உபயோகமான தகவல்களைத் தந்துதவியமைக்காக நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளார்.